**<u>OS.NO. 49/2022 PW-1</u>**

நாள் : 03.01.2025

பெயர் : சாந்தி

க/பெ : ஸ்ரீராமலு

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ரேணுகோபால் நாயுடு உங்களுக்கு என்ன உறவு என்றால் எனக்கு மாமனார் ஆவார். உங்கள் மாமனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 மகன்கள், அவருக்கு மகள்கள் இல்லை. வ.சா.ஆ.3 ரேணுகோபால் நாயுடுவின் வாரிசுசான்றிதழில் மொத்தம் 10 வாரிசுதாரகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து எப்போது கிரயம் பெறப்பட்டது என்றால் என் திருமணத்திற்கு முன்பாகவே என் மாமனார் கிரயம் பெற்றுள்ளார். உங்கள் மாமனார் சர்வேண் 134/1 ல் எவ்வளவு இடம் கிரயம் பெற்றார் என்றால் 109 சென்ட் கிரயம் பெற்றார். கிரயம் பெற்ற சமயத்தில் தாவா சொத்து விவசாய நிலமாக இருந்தது தற்போது அது வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

எத்தனை வருடங்களுக்கு முன்பாக விவசாய நிலமாக இருந்த இடம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டது என்றால் எனக்கு திருமணம் ஆகி 40 வருடங்களாகிறது அதற்கு முன்பாகவே வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுவிட்டது. தாவா மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் யார் யாருக்கு எத்தனை வீட்டு மனைகள் மற்றும் அதன் அளவு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தாலா 25 சென்ட் பிரித்து கொடுக்கப்பட்டது. அந்த 25 சென்ட் நாங்கள் அனுபவித்து வருகிறோம். அளந்து பார்த்து பிரித்து கொடுக்கவில்லை. ரேணுகோபல் நாயுடுவின் வாரிசுதார்களுக்கிடையே பாகப்பரிவினை ஏற்பட்டதா என்றால் ஆமாம். 25 சென்ட்க்கு உண்டான வீட்டு மனைகள் உங்களுக்கு

ஒதுக்கப்பட்டது என்று தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

1 ஏக்கர் 9 சென்ட்ல் உங்களுடைய 25 சென்ட் நிலம் எந்த திசையில் அமைந்துள்ளது என்று வாதுரையில் சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை. நீதிமன்ற உத்திரவு படி நிலத்தை ஆய்வு செய்ய வந்த நில அளவையர் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர் நிலத்தை ஆய்வு செய்ய வந்த போது உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 25 சென்ட் குறித்து சொன்னீர்களா என்றால் நாங்கள் சொன்னோம் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எழுத்துபூர்வமாக 25 சென்ட்யை அளந்து பார்த்து கொடுக்கும் படி நில அளவையர் மற்றும் வழக்கறிஞர் ஆணையர் இடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு மறுப்பு தெரிவித்திருக்க கூடிய மனுவிலாவது 25 சென்ட்யை அளந்து பார்க்க வழக்கறிஞர் ஆணையரிடம் முறையிட்டதாகவும் அதை அவர் நிராகரித்து விட்டதாக சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை.

உங்கள் வீட்டிற்கு முன்பாக உள்ள தெரு அகலமான தெரு என்றால் ஆமாம். அந்த தெருவின் அளவு 29 அடி அகலம் உள்ளது என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதில் 12 அடிக்கு சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது என்றால் சிமெண்ட சாலை போடப்பட்டுள்ளது எத்தனை அடி என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தெருவின் அளவு எவ்வளவு அதில் சிமெண்ட் சாலை எவ்வளவு அளவிற்கு போடப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அளந்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 25 சென்ட் நிலத்தை தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக சர்வேயர் வைத்து அளந்து பார்த்தீர்களா என்றால் ஆமாம்.

நீங்கள் எந்த தேதியில் சர்வேயர் வைத்து அளந்தீர்கள் பணம் கட்டி சர்வேயர் நிலத்தை அளந்த ரசீது உள்ளிட்ட ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். உங்கள் வழக்கிலும் மேற்சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் தலைவர் வந்து அளந்து பார்த்தார். உங்கள் வாதுரையில் சர்வேயர் வைத்து நிலத்தை அளந்த விரவத்தை நீங்கள் சொல்லவில்லை என்றால் ஆமாம். தாவாவில் உள்ள சொத்து விவரத்திலும் 25 சென்ட் குறித்து அளவுகள் சொல்லவில்லை என்றால் ஆமாம். தேராயமாக தான் சொல்லப்பட்டுள்ளது.

தோரயமாக அனுமானத்தின் அடிப்படையில் தான் சொத்து விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவாவில் அட்டவணை சொத்து விவரத்தில் அளவுகள் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். வீட்டு மனைகள் உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு தனி பட்டா எதுவும் பெற்றீர்களா என்றால் இல்லை கூட்டு பட்டாவில் தான் உள்ளது.  கூட்டுபட்டாவில் சர்வே எண் 134/1எ1 ல் தான் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகள்  உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண் 134/1பி ல் உள்ள சொத்துவிற்கும் உங்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் ஆமாம்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி)**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.